# 'தொடர்ந்து ஐக்கியத்துக்காக பாடுபடுவோம்'

Registered as a Newspaper in Ceylon * ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

மலர் 10

[illegible] எண். 49 இதழ் 170

[illegible] 889 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கீலக ஆடி 15 ஜு அவ் 4 செவ்வாய்க்கிழமை (30-7-68)

## சாவகச்சேரியில் அமைச்சர் தஹா

சாவகச்சேரி, திங்கள்

''இந்நாட்டில் வாழும் இருபெரும் சமூகத்தினரிடையே சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் ஏற்படுத்திய பெருமை தேசிய அரசாங்கத்துக்கே உண்டு. தொடர்ந்து இந்நாட்டிலுள்ள சகல மக்களும் ஐக்கியமாகவும் ஒற்றுமையாகவும் வாழ தேசிய அரசாங்கம் தன்னாலானவற்றைச் செய்யும்'' என்று உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ. தஹநாயக்கா நேற்று சாவகச்சேரியில் உறுதியளித்தார்.

சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் தஹா மேற்கண்டவாறு சொன்னார்.

திரு. தஹநாயக்கா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இலங்கை மக்களின் குறைகளைத் தீர்த்துவைக்கும் வகையிலேயே தேசிய அரசாங்கம் பணியாற்றுகிறது. வேலையில்லாத் திண்டாட்

(6-ம் பக்கம் பார்க்க)

# புதிய வரவு-செலவு திட்டத்தில் ரூ. 100 கோடி துண்டுவிழும்

## உத்தேச மதிப்பீடு இன்று தெரியும்

கொழும்பு, செவ்வாய்

தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் சமர்ப்பிக்கப்படவிருக்கும் நான்காவது வரவு-செலவுத்திட்ட உத்தேச மதிப்பீட்டை இன்று பிற்பகல் மக்கள் பிரதிநிதிகள் சபையில் நிதி அமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயக்கா சமர்ப்பிப்பார்.

அடுத்த நிதியாண்டில் அரசாங்கம் செலவிட உத்தேசித்திருக்கும் தொகை எவ்வளவு, அடுத்த நிதியாண்டில் அரசாங்கம் எதிர்பார்க்கும் வருமானம் எவ்வளவு என்பதை இன்று நிதியமைச்சர் தமது உத்தேச மதிப்பீட்டில் தெரிவிப்பார். இம்முறை வரவு-செலவுத்திட்டத்தில் இதற்கு முன் ஒருபோதுமில்லாதவாறு நூறுகோடி ரூபாய் துண்டுவிழும் என எதிர்பார்க்கப்படுகிறது.

துண்டுவிழும் தொகையை சரிக்கட்டுவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கும் திட்டங்களையும் புதிய வரி விதிகளையும் நாளை மறுதினம் நிதியமைச்சர் நிகழ்த்தவிருக்கும் வரவு—செலவுத்திட்டப் பிரசங்கத்தில் தெரிவிப்பார்.

வெளிநாட்டு வங்கிகளில் பணம் வைத்திருக்கும் இலங்கையர்கள் அப்பணத்தை இலங்கையில் முதலிடு செய்வதற்கு சலுகை அளிப்பது பற்றியும் குதிரைப் பந்தயத்தை சட்டரீதியாக்குவது பற்றியும் நிதி அமைச்சர் தமது வரவு — செலவுத் திட்டப் பிரசாரத்தில் வெளியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## மந்திரி திருச்செல்வம் இன்று யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், செவ்.

உள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருச்செல்வம் உத்தியோகபூர்வமாக இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கிறார்.

இன்றுகாலை 8-45 மணிக்கு விமானத்தில் பலாலி விமான நிலையத்தை வந்தடைவார். அங்கிருந்து காங்கேசன்துறையிலுள்ள ரெஸ்ட் ஹவுஸ்க்குச் செல்வார்.

நாளை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் பொது நூல் நிலையத்தில் காலஞ்சென்ற அணை பிதா ஜி. எம். எப். லோங்கின் உருவப்படத்தை திறந்துவைப்பார்.

மாலை 6-30 மணிக்கு யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெறும் நாட்டிய விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

ஆகஸ்ட் 1-ம் தேதி நண்பகல் விமானத்தில் கொழும்பு திரும்புவார்.

## நல்லூர் 12 மணிக்கு கொடியேற்றம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகிறது. இன்று நண்பகல் 12 மணிக்கு கொடியேற்ற உற்சவ நிகழ்ச்சி நடைபெறும்.

வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து கொடி

(6ம் பக்கம் பார்க்க)

பத்மினி கொலை வழக்கு

# எதிரிகள் மூவருக்கும் தூக்குத் தண்டனை

## ஜூரிகள் ஏகமனதான தீர்ப்பு

கொழும்பு, திங்கள்

பத்மினி குலரத்தின கொலை வழக்கில் எதிரிகள் மூவருக்கும் இன்று மரணதண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. ஜூரி சபையினர் எதிரிகள் மூவரும் குற்றவாளிகள் என ஏகமனதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதியரசர் எச். என். ஜி. பெர்னாண்டோ எதிரிகள் மூவருக்கும் மரண தண்டனை விதித்தார்.

காலியைச் சேர்ந்த திருமதி பத்மினி குலரத்தின கொலை சம்பந்தமாக இந்த மூன்று எதிரிகளுக்கும் எதிராக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. திருமதி பத்மினி குலரத்ன கொலை சம்பந்தமாக காலஞ்சென்றவளின் கணவர் டாக்டர் டி. ஜி. டி எம். குலரத்ன, காலஞ்சென்றவளின் மாமியாரும் கணவரின் தாயாருமான திருமதி லோரா குலரத்ன [70], அவர்களின் சமையல்காரியான மாவலகே சோபியா ஆகியமூவர் மீதும் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. முதல் குற்றச்சாட்டில் திருமதி பத்மினி குலரத்னவை கொலைசெய்ய சதித்திட்டம் வகுத்ததாக மூன்று எதிரிகள் மீதும் குற்றச்சுமத்தப்பட்டிருந்தது. இரண்டாவது குற்றச்சாட்டில் பத்மினி குலரத்னவுக்கு உணவில் நஞ்சுகலந்து கொலைசெய்ததாக சமயல்காரியான மாவலகே சோபியா மீதும் மூன்றுவது குற்றச்சாட்டில் இக்கொலைக்கு உடந்தையாக இருந்ததாக டாக்டர் குலரத்ன மீதும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

விசாரணையின் முடிவில் ஜூரிசபையினர் எதிரிகள் மூவரும் குற்றவாளிகள் என ஏகமனதாகத் தீர்ப்பு அளித்தனர்.

நேற்று ஆரம்பமான நீதியரசரின் தொகுப்புரை இன்று முடிவடைந்ததும், ஜூரிசபையினர் மந்திராலோசனைக்காக தனியறைக்குச் சென்றனர். ஒன்றரை மணி நேரம் மந்திராலோசனை செய்தபின்னர் திரும்பி வந்து தாம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டதாக நீதியரசிடம் தெரிவித்தனர். ஜூரி சபையினர் ஏகமனதாக குற்றவாளிகள் எனத் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து நீதியரசர் தமது தீர்ப்பை வழங்கினார்.

### "நான் நிரபராதி"

நீதிஅரசர் தீர்ப்பு வழங்கிய பின்னர் எதிரிகளைப் பார்த்து "ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?" என்று கேட்டார்.

''நான் நிரபராதி'' என்று கலங்கிய கண்களுடன் கூறினார் காலஞ்சென்ற திருமதி பத்மினியின் 48 வயதான கணவர் டாக்டர் குலரத்ன. டாக்டர் குலரத்னவின் தாயாரான திருமதி லோரா குலரத்ன ''நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை'' என்று கூறிவிட்டு அழுதார். சோபியாவும் அதேமாதிரி ''நான் சொல்வதற்கொன்றுமில்லை'' என்று கூறிவிட்டு அழுதார்.

டாக்டர் குலரத்தின மீதான மரணதண்டனை வரும் செப்டம்பர் மாதம் 3-ம் திகதியும், செப்டம்பர் 4-ம் திகதி அவரது தாயார் திருமதி லோரா குலரத்ன மீதான மரணதண்டனையும், பணிப்பெண் சோபியா மீதான மரணதண்டனை செப்டம்பர் 5-ம் திகதியும் நிறைவேற்றப்படும்.

இத்தீர்ப்பு வழங்கப்பட்ட வேளை [illegible]

[6-ம் பக்கம் பார்க்க]

அச்சுவேலி சூட்டுச் சம்பவம்

## யாரடா சுட்டது? என்று தவராசா கேட்டாராம்

### சந்தேக நபருக்கு ரிமாண்ட்

குரும்பசிட்டி, திங்.

துப்பாக்கிச்சூடுபட்டு ஸ்தலத்திலேயே மரணமான அச்சுவேலியைச் சேர்ந்த எம். தவராசாவின் கொலை சம்பந்தமாக காங்கேசன்துறைப் பொலிசாரால் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டிருந்த அன்னராசா மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு அடுத்தமாதம் 6-ந் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயப்பட்டு யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள இராஜகுலசிங்கம் என்பவர் பொலிஸாருக்கு அளித்துள்ள வாக்குமூலத்தில் கூறியிருப்பதாவது:

''சம்பவதினம் இரவு 9 மணியளவில் இறந்தவரை பஸ்நிலையத்தில் நான் சந்தித்தபோது தனக்கு காலில் காயம் ஏற்பட்டுள்ளதாகக் கூறினர். இதன்பின்னர் பாலன் என்பவரிடமிருந்து சைக்கிள் ஒன்றினைப் பெற்றுக்கொண்டு காலஞ்சென்றவரையும் கூட்டிக்கொண்டு அவரது வீட்டிற்குச் செல்லத் தயாரானேன். இந்நேரத்தில் முத்து தையல்கடைப்பக்கத்திலிருந்து துவக்குவெடிச்சத்தம் கேட்டது. எனது பின்பக்கத்தில் உடனே காயமேற்பட்டது. இதனால் சைக்கிளிலிருந்து இருவரும் நிலத்தில் விழுந்துவிட்டோம்.

பின்னர் இறந்தவரான தவராசா முத்து கடைப்பக்கம் சென்று 'யாரடா சுட்டது' எனக் கேட்டார். கடைவாசலில் அந்நேரம் சந்தேகநபர் உட்பட மூவர் துப்பாக்கிகளுடன் நின்றுகொண்டிருந்தனர். சந்தேக நபர் அப்போது இறந்தவரைநோக்கி சுட்டார். மற்றவர்களில் ஒருவர் எனக்கு சுட்டதால் நான் மயக்க

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகம்

பிரார்த்தனை ஒன்று தான் நமக்கும் தெய்வத்துக்கும் தொடர்பு ஏற்படுத்தும் வழியாகும். அவரது சக்தியும், கருணையும், சாந்தியும் நமக்குள் பாய பிரார்த்தனையே வழி செய்கிறது.

— சுவாமி ராமதாஸ்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone 389.

சுருப்பாண கைலையுஷம் ஆடி மாதம் 15-ந்திகதி
(30-7-68)

## குடியேற்றத் திட்டங்கள்

"வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதுதான் எங்களுடைய அடுத்த போராட்டம்" என்று முன்னாள் பிரதம நீதியரசரும் "லங்கா ஹேவி பெரமுன" எனப்படும் இலங்கை விவசாயிகள் முன்னணியின் தலைவருமான திரு. ஹேமா பஸநாயகா, திஸமகாராமவில் ஒரு சமய வைபவத்தில் பேசுகையில் கூறியிருக்கிறார். 1956ம் ஆண்டின் பின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்கள மக்கள் குடியேற்றப்படவில்லை யென்றும் திரு. ஹேமா பஸநாயகா கூறியிருக்கிறார். பிரதம நீதியரசராகப் பதவிவகித்து ஓய்வுபெற்ற திரு. பஸநாயகா சமீபகாலத்திற் பேசிவரும் பேச்சுக்களைப் பார்க்கையில் இது ஒன்றும் புதுமையோ ஆச்சரியமோ அல்ல. ஆனாலும் அவரது இந்தப் பேச்சுக்கள் பெரும்பான்மைச் சமூகத்தவரின் மத்தியில் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்திச் சிறுபான்மையினருக்கு எதிராகக் குரோதத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தக்கூடும். அரசாங்கம் மட்டுமல்லாது நிதானமிற்றதைய உடைய பெரும்பான்மைத் தலைவர்களும் உண்மை நிலையை உணர்ந்து திரு. ஹேமா பஸநாயகா போன்றவர்களின் வகுப்புவாதப் பிரசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வரவேண்டியது அவசியம்.

குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டதன் நோக்கமே காடுகளை அழித்துக் கழனிகளாக்கி நாட்டின் உணவு உற்பத்தியை அதிகரிக்கவேண்டுமென்பதுதான். துரதிர்ஷ்டவசமாகக் குடியேற்றத் திட்ட விஷயங்களையும் வகுப்புவாதக் கண்ணோட்டத்தும் அரசியல் கண்ணோட்டத்தும் நோக்கியதன் விளைவாகக் குடியேற்றத் திட்டங்கள் உரிய பயனை அளிக்க தவறிவிட்டன. இதற்கு மாறாக வகுப்பு ஒற்றுமை குலைவதற்கே இவை வழிவகுத்திருக்கின்றன. மின்னேரியாவில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத் திட்டத்திலேயே இலங்கை வாழ் சகல இன மக்களும் விகிதாசாரப்படி அருகருகே குடியேற்றப்பட்டிருந்தால் குடியேற்றத் திட்டத்தின் நோக்கமும் நிறைவேற்றப்பட்டிருக்கும்; இன ஒற்றுமையும் வளர்ந்திருக்கும். வகுப்புவாத அடிப்படையில், விவசாய விருத்தியை மறந்து, விவசாயிகளல்லாதவர்களுக்கும், விவசாயத்தில் அக்கறையில்லாதவர்களுக்கும் குடியேற்றத் திட்டங்களில் இடமளிக்கப்பட்டதன் விளைவுதான் 1956ம் ஆண்டில் கல்லோயாவிலும், 1958ம் ஆண்டில் பதவியாப் பகுதியிலும் நிகழ்ந்த துரதிர்ஷ்ட சம்பவங்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்கள மக்கள் குடியேற முடியாமலுள்ளதென்று திரு. ஹேமா பஸநாயகாவும் மற்றும் சிலரும் பிரசாரம் செய்து வருகின்றனர். தமிழரசுக் கட்சியினர், சிங்கள மக்கள் குடியேறுவதைத் தடைசெய்வதாகவும் பிரசாரம் செய்துவருகின்றனர். வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் சிங்கள மக்கள் குடியேறி வாழ்கிறார்கள். அவர்களை யாரும் தடுக்கவில்லை. இப்பொழுதும் இனியும் குடியேறி வாழ்வதற்கு யாரும் தடையாக இல்லை. இந்த இரு மாகாணங்களிலும் பௌத்த விகாரைகளிருக்கின்றன. பௌத்த சிங்களவரல்லாதவர்களும் விகாரைக்குச் சென்று வணங்கி வருகின்றனர். தென்னிலங்கையில் தமிழர்கள் எப்படிக் குடியேறி வாழ்கிறார்களோ அப்படி வட இலங்கையிலோ கிழக்கு இலங்கையிலோ சிங்கள மக்கள் குடியேறி வாழலாம். அதை யாரும் தடுப்பதற்கு முன்வரவில்லை; முன்வரமாட்டார்கள். ஆனால் அரசாங்கம் திட்டமிட்டு இப்பகுதிகளில் சிலரைகுடியேற்றுவதையே தமிழரசுக்கட்சியினரும் மற்றையாரும் எதிர்க்கின்றனர். வடக்கிலும் கிழக்கிலும் பரம்பரையாக வாழும் மக்களுக்குச் சொந்தமாக நிலம் இல்லாதிருக்கையில் இந்த மாகாணங்களில் வெளியாரைக் கொண்டுவந்து குடியேற்றுவது? அந்தப் பகுதி மக்களையே குடியேற்ற வேண்டுமென்று கேட்பதில் தவறு என்ன? இலங்கையில் எந்தப் பகுதியிலும் எந்த மக்களும் சுதந்திரமாகவும் அச்சமின்றியும் வாழக்கூடிய நிலையிருந்தால் தென்னிலங்கையில் வடக்கு கிழக்கு மாகாண மக்கள் குடியமர்த்தப்பட்டால், இந்த இரு மாகாணங்களிலும் வெளியாரைக் குடியமர்த்துவதில் தவறிருக்க முடியாது.

இதுதவிர இதர மாகாணங்களில் வாழும் சிங்கள மக்கள் வடக்கிலும் கிழக்கிலுமுள்ள சுவாத்தியத்தைச் சகித்துக் கொள்வார்களா?

வகுப்புவாத, அரசியல் கண்ணோட்டத்தை விடுத்து நாட்டின் அபிவிருத்தியை மட்டும் கருத்தில் கொண்டால், தாய்நாடு திரும்பும் இந்திய வம்சாவழியினரைவிட இலங்கைப் பிரஜைகளாகும் இந்திய வம்சாவழியினரையே வடக்கிலும் கிழக்கிலுமுள்ள தரிசு நிலங்களிலும், காடுகளிலும் குடியமர்த்தவேண்டும். இதுவே நாட்டை ஆளவர்கள் செய்ய வேண்டிய கடமை.

## கொழும்புக் கடிதம்

# மாவட்டசபை தமிழருக்கு வெற்றியா தோல்வியா?

### 'தமிழரசு' என்ற பெயர் சந்தேகத்தைக் கிளப்புகிறது

(நமது கொழும்பு நிருபர்)

"இருசண்டைகளில் நாம் தோற்கலாம். ஆனால் பெரிய யுத்தத்தை நாங்களே வெல்வோம்" என்று பிரதம மந்திரி சென்றவாரம் பாராளுமன்றத்தில் கூறியது கவனிக்கத்தக்கது. தமக்கும் எதிர்க்கட்சிகளுக்குமிடையே மாவட்டசபை சம்பந்தமான சண்டையைத்தான் அவர் குறிப்பிட்டார் என்பது தெளிவு.

பிரதமர் இவ்விஷயத்தில் கடைசிவரை தீரப்போர்புரிந்து தற்காலிகமாகத் தோற்றுவிட்டபோதிலும் பின்னொரு காலத்தில் வெற்றிபெறலாமென்று நம்புகிறார். சமஷ்டிக்கட்சி இத்தோல்வியை ஒப்புக்கொண்ட போதிலும் அதனால் அதற்கு அவமானம் என்று கூறமுடியாது.

அதன் தலைவர்களான திருவாளர்கள் செல்வநாயகமும் திருச்செல்வமும் மாவட்டசபைகளைப் பெற்றுக்கொள்வதற்கு கடமையுணர்ச்சியுடன் போரிட்டார்கள்.

மாவட்டசபை சண்டை இன்னும் சரியாகமுற்றுப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எல்லாம் நன்மைக்கே என்று கூறப்படுவதுபோல் பிரதம மந்திரி மாவட்டசபை மசோதாவை ஏற்றுக்கொண்டதே சமஷ்டிக் கட்சிக்கு ஒருபெரிய வெற்றியாகும்.

அதைநாட்டுக்கு நன்மை தரும் என்று பூரணமாக நம்பும் பிரதமர் வசதியான இன்னொரு சூழ்நிலையில் மறுபடியும் அதைப் புகுத்துவார். அவரைத் தவிர வேறெவரும் அதை நாடாளுமன்றத்தில் கொண்டுவரமாட்டார்கள். தொடர்ந்து அரசாங்கத்திலிருந்து ஆதரவு கொடுத்த சமஷ்டிக்கட்சி தீர்மானித்தது புத்திசாலித்தனம். திருமதி பண்டாரநாயகாவோ, மார்க்ஸியவாதிகளோ அல்லது வேறெந்த அரசாங்கமோ அதைக் கொண்டுவருமென்று சமஷ்டிக்கட்சி நம்பமுடியாது. 1970-ம் பொதுத்தேர்தல் யுத்தத்தைத் தான் வெல்ல முடியுமென்று திரு சேனநாயகா தெரிவித்துவிட்டபடியால் அதுவரை பொறுத்திருந்தாலென்ன?

சமஷ்டிக்கட்சி வருங்கால தமிழ்ப் பரம்பரைகளையும் நோக்கில் வைத்துத்தான் பொறுத்திருக்கிறது.

எதிர்க்கட்சி மசோதாவை யல்ல தமிழரையே எதிர்த்தது என்பதை உணர்ந்தால் எல்லாம் தெளிவாகி விடும். முன்பு மசோதாவை ஆதரித்த திருமதி பண்டாரநாயகாவும் டாக்டர் என்.எம் பெரேராவும் தமிழர் டட்லியுடன் சேர்ந்து கொண்டபடியால் தான் இப்பொழுது அதை எதிர்க்கிறார்கள்.

ஃ ஃ ஃ

பிரதமர் சேனநாயகாவின் அரசாங்கத்திலிருந்து தமிழரைப் பிரித்துவிட்டால் இனிமேல் பேரம் பேசும் பலம் அவர்களுக்கு இருக்கமாட்டாதென்பதே எதிர்க்கட்சியின் தந்திரம். யூ என் பி., சுதந்திரக்கட்சி, மார்க்ஸிய வாதிகள் எல்லோருமே தமிழரை வெறுத்து ஒதுக்க வேண்டுமென்பதே நோக்கம்.

சமஷ்டிக்கட்சியின் புத்திசாலித்தனமான முடிவு இச்சூழ்ச்சியைத் தகர்த்து விட்டது.

தமது ஆதரவாளர் சிலரை இழந்தாலும் பிரதமர் தமது பெரும்பான்மைப் பலத்துடன் மசோதாவை வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கலாம். ஆனால் அதனாலென்ன பலன்?

வடக்கு கிழக்கு மாகாணங்களைத்தவிர பிறஇடங்களில் மாவட்டசபைகள் பகிஷ்கரிக்கப்பட்டிருக்கலாம். அவற்றின் நடவடிக்கைகளெவ்வொன்றும் மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரத்துக்கும் நாடாளுமன்ற கண்டனத்துக்கும் உட்படுமாதலால் அவற்றால் அதிகபலன் ஏற்பட்டிராது.

'டைம்ஸ்' பத்திரிகை கூறியது:- தேசிய அரசாங்கத்துக்கு தொடர்ந்து ஆதரவு கொடுத்து யூ.என்.பி.க்கும் சமஷ்டிக்கட்சிக்குமிடையில் பிளவு உண்டுபண்ணுவதே எதிர்க்கட்சியினர் நோக்கம். இம்மசோதா வந்தாலும் வராவிட்டாலும் யூ.என்.பி.யுடன் இருப்பதால்தான் நீதியும் நியாயமும் பெறலாமென்று நம்பிய சமஷ்டிக்கட்சி நிலைமையை ஏற்றுக்கொண்டது தமிழரின்வருங்காலம் யூ.என்.பி யுடனேயே

(5-ம் பக்கம் பார்க்க.)

## ஆசிரியருக்குக் கடிதம்

### பதிவேட்டில் வந்தது பொய்யா?

"ஆர். ஜி. கற்றை மறந்தேன், எவரையும் குறை கூற வில்லை" என்ற தலையங்கத்தின் கீழ் திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. கூறியுள்ள விளக்கம் இம்மாதம் 28-ந் திகதி வெளிவந்த 'ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

ஆட்சிமன்ற பதிவேடான 'ஹன்சார்டில்' [திருத்தப்படாத பதிப்பு] திரு. அமிர்தலிங்கம் குறுக்கிட்டுக் கூறியதாக, "சோவியர்கள் ஹரிஜனர் அல்ல, அவர்களே உண்மையில் ஹரிஜனரை அடக்குபவர்கள்" என்று ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டிருப்பது பொய்யானதா?

ஆ. க. நடராஜன்
உடுவில்,
சுன்னாகம்.

## ஐயாறன் எழுதுகிறார்

பெண்ணாகப் பிறந்துவிட்டால், அதுவும் ஈழத்திலே தமிழ் சமூகத்தில் பிறந்துவிட்டால் அம்மம்மா எவ்வளவு கஷ்டம்!

தாயை சிறுவயதில் இழந்துவிட்ட நிர்மலா தனித்துப் பள்ளிக்கூடம் செல்லுகிறாள். வழியில் லொறியிலே குடித்துவிட்டுக் கும்மாளமடித்துக் கொண்டு சென்ற மாணவர்கள் அந்த அபலையைப் பிடித்து தொல்லைப்படுத்துகிறார்கள். இந்தச் செய்தி தெருவெல்லாம் ஊரெல்லாம் பரவிவிட்டது. வம்பளக்கும் வாய்கள் சும்மாவிடுமா? போதாக்குறைக்கு இருபது ஆண்டுகளுக்கு முன் அவளுடைய இறந்துபோன சிறியதாயைப்பற்றியும் பலபல அவதூறுகள். மாதா பிதா செய்த பாவம் மக்கள் தலையிலே.

பத்து இடங்களில் கல்யாணம் பேசி, பத்தும் தட்டித் தட்டிப் போய்விட்டது. காரணம் அவதூறுதான்! எப்படியிருக்கும் அப்பெண்ணுக்கு! வீட்டிலே அண்ணன்காரன் நெருப்பெடுக்கிறான். தாங்காமல் மனமுடைந்து கிணற்றில் விழுந்துவிடுகிறாள் நிர்மலா.

பின்னரும் ஒரு கல்யாணம் நிச்சயமாகி அதுவும் கடைசி நேரத்தில் உடைகிறது? மாப்பிள்ளை கண்டிக்குச் சென்று திரும்பவில்லை. அவனைத் தேடிக் கொண்டு சென்ற அப்பெண், தன்னவர் மற்றோர் பணக்காரப் பெண்ணை விவாகம் செய்ய ஏற்பாடு செய்வதைக் கண்டு துடிதுடிக்கிறாள். இடையிலே தகப்பனும், அவரது முதலாளியும் அவள் காரணமாகவே கொலை செய்யப்படுகின்றனர். கடைசிவரை சொல்லொணாத வேதனைப்பட்டு, தெய்வ அருளால் எல்லாம் நல்லதாக முடிகிறது. தன்தவறை அவள் மகன் உணர்ந்த திருந்துகிறான்.

பல நல்ல படிப்பினைகளுடன் கூடிய, ருசியான இந்தக் கதை தமிழ்ப்பெண்ணின் சங்கடங்களை வெளிப்படுத்தி, பெண்ணின் விமோசனத்துக்கு வழி செய்யத் தூண்டுவதாக இருக்கின்றது. இந்தக் கதையை ஈழத்திலேயே தமிழ்ப்படமாகப் பிடித்துக் காட்டுகிறார்கள். இடையிலே ஒரு குட்டி நாட

(6ம் பக்கம் பார்க்க)

## மணியோசை கேட்குதம்மா!

இராகம்: கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

மணியோசை கேட்குதம்மா — நல்லைக்கந்தன்
மணியோசை கேட்குதம்மா.

அநுபல்லவி

பணிசெய்யும் பக்தருள்ளம் பண்ணொலிரச் செய்யும்
அணிதிகழ் மால்மருகன் ஆரூர் நல்லைக்கந்தன்
—மணியோசை

சரணம்

அகத்திருந்தே குகன் அருட்திரு நாமம்சொல்வார்
செகம்புகழும் சேந்தன் சேவடி தொழவிரைவார்
மகபதியே என்று மங்கையர் விளக்கிடவும்
[illegible] சுந்தரஓங்கார —மணியோசை

[illegible] க. முத்துக்குமாரசாமி

ஒழியுங்கள் நுளம்புகள்
கரப்பொத்தான்கள்
இலையான்கள் முதலியவற்றை



மிஸ்டொக்ஸ்
டி.டி.வி.பி. அடங்கியது
Mistox
ஏக விநியோகத்தர்கள்:
ஏ. பீ. இறிசி அண்ட் கம்பனி லிமிட்டெட்,
57, ராணி வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யத் தலைவர்களை சந்திக்க செக். தலைவர்கள் நாட்டின் கிழக்குப் பகுதி சென்றனர்

## 'விளக்கம்கூற நாம் போகவில்லை; கருத்துபரிமாறவே செல்கிறோம்'

### செக். தலைவர் கூற்று

பிராக், ஜூலை 29

ரஷ்யத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தும் பொருட்டு, செக்கோஸ்லாவாக்கியத் தலைவர்கள், தமது நாட்டின் கிழக்குப் பகுதிக்குச் சென்றுள்ளனர். செக். கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி, திரு. டுபெக் மற்றும் செக். பிரதமர் அதிபர் ஆகியோரும் செக். தூதுகோஷ்டியில் அடங்கியுள்ளனர்.

சோவியத்-ஹங்கேரி எல்லையில்உள்ள ஓர் இடத்தில் ரயில் பெட்டியொன்றில் இரு நாட்டுத் தலைவர்களும் சந்தித்துப் பேசுவர்.

ரஷ்யத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளுக்குச் செல்லும் செக். தலைவர்கள் நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள செய்தியொன்றில், தமக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் முழுஆதரவை நல்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். அத்துடன், பேச்சுவார்த்தைகளுக்கு இடையூறு விளைவிக்கும் எந்த நடவடிக்கையையும் எடுக்கவேண்டாமென்றும் அவர்கள் மக்களைக்கோரியுள்ளனர். பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்குமுன்னர் செக். நிலையை ஆதரிக்குமுகமாக ஐந்து நிமிட அடையாள வேலை நிறுத்தமொன்றை நடத்துவதெனத் தொழிலாளர் தீர்மானித்திருந்தது குறித்தே இக்கோரிக்கையைத் தலைவர்கள் விடுத்துள்ளனர்.

செக். தூதுகோஷ்டியில் அங்கம்வகிப்பவரும், செக். தேசிய அசெம்பிளியின் தலைவருமானவர், பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளும் தலைவர்கள் நாட்டைக்காட்டிக்கொடுத்தால், அது பாரதூரமான குற்றமாகும் என்று கூறியுள்ளார்.

தாம் பேச்சுவார்த்தைகளுக்குச் செல்வது, தமது நடவடிக்கைகளுக்குக் காரணங்காட்டி விளக்குவதற்கல்லவென்றும் கருத்துப்பரிமாறலுக்கேயாகுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கம்யூனிஸ்ட் நாடுகளுக்கிடையே சக வாழ்வுக் கொள்கை இடம்பெறவேண்டியதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

**பத்திரிகையாளர்**

செக். பத்திரிகையாளர், போலாந்து, கிழக்கு ஜெர்மனி, ஹங்கேரி, பல்கேரியா ரஷ்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பத்திரிகையாளர்களைச் செக்கோஸ்லாவாக்கியாவுக்கு வருமாறு அழைத்துள்ளனர். நேரில் வந்து நாட்டு நிலைமையைப் பார்க்குமாறு அந்த அழைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

செக். பத்திரிகையொன்று நடத்தியுள்ள பொதுஜன வாக்கெடுப்பொன்றில் நாட்டின் புதிய சோஷலிசக் கொள்கைக்கு ஆதரவாக 90 சத வீத மக்கள் வாக்களித்துள்ளதாகச் செக். செய்தித்தாபனம் அறிவித்துள்ளது.

## தெற்கு ஏமனில் கிளர்ச்சி

ஸானா, ஜூலை 29

தெற்கு ஏமன் குடியரசில் ஒரு கிளர்ச்சி நடைபெற்றதாகவும், அது இப்போது அடக்கப்பட்டு விட்டதாகவும் தெற்கு ஏமன் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தெற்கு ஏமனில், கிளர்ச்சிக்காரர்களுக்கும், அரசாங்கத் துருப்புகளுக்குமிடையே இரு பகுதிகளில் சண்டை நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது. இந்த இரு பகுதிகளிலும் கிளர்ச்சிக்காரர் முறியடிக்கப்பட்டனர்.

சவுதி அரேபிய, அமெரிக்க எண்ணெய் முதலாளிகளின் சதித் திட்டத்தின் விளைவே இந்தக் கிளர்ச்சி என்று தெற்கு ஏமன் அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

அத்துடன், தெற்கு ஏமனிலுள்ள இரு அரசியற் கட்சிகளான தெற்கு அரபிய விடுதலை முன்னணி, புளொஸி ஆகியனவும் இக்கிளர்ச்சிக்குத் தூண்டுகோலாக இருந்திருக்கின்றன என்றும் தெற்கு ஏமன் அரசு புகார்செய்துள்ளது.

## மகாத்மா காந்தி நூற்றாண்டு விழா

### சர்வதேசப் பொருட்காட்சி

புதுடில்லி, ஜூலை 29

மகாத்மகாந்தியின் நூற்றாண்டு விழாவையொட்டி அடுத்த ஒக்டோபர் மாதம் புதுடில்லியில் ஒரு சர்வதேசப் பொருட்காட்சி நடைபெறுமென இந்திய மத்திய தகவல் ஒலிபரப்பு மந்திரி திரு. கே. கே. ஷா, வர்தாவுக்கருகேயுள்ள காந்தி சேவா கிராமத்தில் நடைபெற்ற காந்தி நூற்றாண்டு விழாக் கமிட்டிகளின் தலைவர்களின், காரியதரிசிகள் மாநாட்டில் பேசுகையில் அறிவித்துள்ளார்.

மாநாட்டில் பேசிய இந்தியத் துணைப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், சர்வதேசப் பொருட்காட்சி இளைஞர் சமுதாயத்துக்கு மகாத்மாவின் போதனைகள், இலட்சியங்கள் ஆகியவற்றை நன்குணர்த்த உதவுமென்று குறிப்பிட்டார்.

## இணைப்புக்குழு

மன்னார், திங்கள்

வவுனிக்குள இணைப்புக் குழுவின் கூட்டம் நாளை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் கருவிற ... [illegible] ... தில் நடைபெறவுள்ளது.

## செக். அரசியல் நிலைமை

## சோஷலிஸத்துக்கு ஆபத்து

### 'பிராவ்டா' மீண்டும் தாக்குதல்

மாஸ்கோ, ஜூலை 29

ரஷ்யப் பத்திரிகையான "பிராவ்டா" மீண்டும் செக்கோஸ்லாவாக்கியா மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

செக்கோஸ்லாவாக்கியாவின் புதிய அரசியல் சோஷலிஸத்துக்கு இன்னும் ஆபத்தாகவே விளங்குவதாக அப்பத்திரிகை கூறியுள்ளது. "நேரம் சும்மா பார்த்துக் கொண்டு நிற்பதில்லை" என்று அது குறிப்பிட்டுள்ளது.

கம்யூனிஸ எதிர்ப் புரட்சியொன்றுக்கான பாதையைத் தடைசெய்துவிடுமாறு அப்பத்திரிகை செக். மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

**போருக்கானஜரூர்நிலை**

சோவியத் பாதுகாப்பு மந்திரி மார்ஷல் கிரெச்கொவ், சோவியத்-மேற்கத்திய எல்லையில் நடைபெறும் இராணுவப் பயிற்சிகளைப் பார்வையிட்டார். போருக்கான ஜரூர் நிலையில் இருக்குமாறு அவர் படைகளிடம் அறிவித்துள்ளார்.

சோவியத் மேற்கத்திய எல்லையில் நடைபெறும் பேரர் ஒத்திகைப் பயிற்சிகளில் முன் எப்போதுமில்லாத அளவுக்கு ரஷ்யத் துருப்புகள் பெருமளவில் பங்கு கொண்டுள்ளன. இப்பயிற்சிகள் அடுத்த மாதம் 10-ந் திகதி வரை தொடருமெனத் தெரிகிறது.

## மலேஷிய - பிலிப்பைன்ஸ் தகராறில் சமரச முயற்சி

கோலாலம்பூர், ஜூலை 29

மலேஷியாவுக்கும், பிலிப்பைன்ஸுக்குமிடையே சபா பிராந்தியம் சம்பந்தமான தகராறு பற்றிச் சமரசம் உண்டாவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

ஒரு மூன்றாவது நாட்டின் சமரச முயற்சிகளின் கீழ், இப்போது இரு நாடுகளும் தமது பிரச்னையைவிட்டுப் பேச்சுவார்த்தைகள் நடத்த முற்பட்டுள்ளன.

இதற்கிடையில், இந்தோனேஷியாவும், அமெரிக்காவும் தென் கிழக்காசியப் பிராந்திய ஒற்றுமையை முன்னிட்டு, இரு நாடுகளையும் தமது தகராறைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளன.

அமெரிக்கா

## குண்டுவீச்சை நிறுத்தினால் போர்க்கைதிகளுக்கு விடுதலை

### வட வியட்னும் அறிவிப்பு

பாரிஸ், ஜூலை 29

வட வியட்னும் மீதான குண்டுவீச்சையும், மற்றும் போர் நடவடிக்கைகளையும் அமெரிக்கா நிறுத்திக் கொண்டால், சகல அமெரிக்கப் போர்க் கைதிகளையும் வட வியட்னும் விடுவிக்குமென்று பாரிஸில் நடைபெறும் வியட்னும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றும் வட வியட்னும் தூதுகோஷ்டித் தலைவர் திரு. ஸுவான் தியூ கூறியுள்ளார்.

பாரிஸ் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் எவ்வித முன்னேற்றமும் இதுவரை ஏற்படவில்லை என்று குறிப்பிட்ட அவர், பேச்சுவார்த்தைகளுக்குத் தாம் உண்மையான நோக்கத்துடன் வந்தபடியாலேயே தாம் இன்னும் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவருவதாக மேலும் கூறினார்.

## இஸ்ரேல் விமானக் கடத்தல்

### ஐ. நா. விசாரணையை இஸ்ரேல் கோருகிறது

டெல் அவிவ், ஜூலை 29

அண்மையில் இஸ்ரேலிய விமானமொன்று அரபுத் தேசியவாதிகளால் அல்ஜீரியாவுக்குக் கடத்திச்செல்லப்பட்ட சம்பவம் பற்றி விசாரணை நடத்துமாறு ஐ. நா. பத்தோபந்து சபையிடம் கோருமாறு இஸ்ரேலிய மந்திரிசபை, இஸ்ரேலிய பிரதமர் திரு. எஷ்கொலையும், வெளியுறவு மந்திரி திரு. எபானையும் பணித்துள்ளது.

விமானத்திலிருந்த 22 இஸ்ரேலியர், பிரயாணிகளும் சிப்பந்திகளும் உட்பட அல்ஜீரிய அரசாங்கத்தினால் தடுத்து நிறுத்திவைக்கப் பட்டிருந்தனர். இவர்களில் 7 பெண்களும் மூன்று குழந்தைகளும் உட்பட 10 பேர் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டு, நேற்றுச் சுவிட்சர்லாந்திலிருந்து டெல் அவிவ் போய்ச்சேர்ந்தனர்.

டெல் அவிவ் வந்துசேர்ந்த பிரயாணிகள், தாம் அல்ஜீரியாவில் நல்ல முறையில் பேணப்பட்டதாகவும், மீதி 12 பேரும் விரைவில் விடுவிக்கப்படுவர் என்று நம்புவதாகவும் கூறியுள்ளனர்.

## பிரிட்டனின் இரண்டாவது மாற்றுஇருதய பொருத்தக்காரர் மரணமாகி விட்டார்

லண்டன், ஜூலை 29

லண்டன் ஆஸ்பத்திரியொன்றில் கடந்த வெள்ளியன்று இரண்டாவது தடவையாக பிரிட்டனில் மாற்று இருதயம் பொருத்தப்பட்டவரான திரு. கோர்டன்போர்ட் என்பவர் காலமாகிவிட்டார்.

பிரிட்டனின் முதலாவது மாற்று இருதயப் பொருத்தக்காரரான திரு. பிரெடெரிக் வெஸ்ட் ஆறு வாரத்துக்குப் பின்னரே மரணமாகினார். ஆனால் இரண்டாவது மாற்று இருதயப் பொருத்தக்காரரான திரு. கோர்டன் மூன்று நாட்களிலேயே மரணமடைந்துவிட்டார்.

கார் விபத்தில் இறந்த ஒருவரின் இருதயமே இவருக்குப் பொருத்தப்பட்டது.

## 9வது உலக இளைஞர் விழா

சோபியா, ஜூலை 29

பல்கேரியாவின் தலைநகரான சோபியாவில், 9வது உலக இளைஞர் விழா நேற்றுக் கோலாகலமாக ஆரம்பமாகியது.

சோபியாத் தெருக்களில், 48 நாடுகளின் பிரதிநிதிகள் கவர்ச்சிகரமான ஊர்வலமொன்றில் சென்றனர்.

இந்த உலக இளைஞர் விழாவில், முதற் தடவையாகச் சீனர், அல்பேனியர், யூகிஸ்லாவியர் ஆகியோர் கலந்துகொள்ளவில்லை.

விழாவுக்கு வந்துகொண்டிருந்த செக். இளைஞர் குழு பல்கேரிய எல்லையில் வைத்துத் திருப்பியனுப்பப்பட்டது.

## ரொடீஷிய நீதிபதியும் அரசி கட்டளையும்

சலிஸ்பரி, ஜூலை 29

ரொடீஷியாவில் ஆபிரிக்கத் தேசியவாதி ஒருவரைச் சிறையிலிருந்து விடுதலை செய்யுமாறு பிரிட்டிஷ் அரசி விடுத்த உத்தரவொன்றின்கீழ் அவரை அவ்விதம் விடுதலை செய்வதில் மற்றைய உயர் நீதிமன்ற நீதிபதிகள் தம்முடன் உடன்படாவிடில் தாம் தமது பதவியிலிருந்து ராஜினாமாச் செய்யப்போவதாக ரொடீஷிய உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் அறிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் அரசியின் கட்டளை ஆபிரிக்கத் தேசியவாதியை விடுதலை செய்யுமாறு ரொடீஷிய கவர்னரையும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஒன்பது பேரையும் பணித்துள்ளது.

## பொலிஸ் சூட்டு ஒருவர் பலி

திருநெல்வேலி, ஜூலை 29

தென் இந்தியாவில் திருநெல்வேலிக்கருகே உள்ள ஓரிடத்தில் இரு குற்றவாளிகளைப் பிடிக்கச் சென்ற ஒரு பொலிஸ் கோஷ்டியை வன்முறைக்கும்பலொன்று தடுத்துநிறுத்தமுற்பட்டபோது பொலிசார் சுட்டதில் ஒருவர் மரணமானார். மூன்று பொலிஸ்காரருக்கும் காயமேற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலி கிராமசபை எல்லை விபரங்கள்

யாழ்ப்பாணம், செவ்வாய். அராலி கிராமசபையின் 5ம், 6ம், வட்டார எல்லை விபரங்கள்-

**5-ம் வட்டாரம்**
(செம்பிதோட்டம்)

வடக்கு: பெரியகுளம் வாய்க்கால் மதகின் மத்தியிலிருந்து கிழக்கு நோக்கி கிழுவலை—இராவலை வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக கம்பாக ஒழுங்கைச் சந்தியின் மத்திவரையும் அங்கிருந்து தெற்கு நோக்கி சிற்றொழுங்கையின் மத்தியோரமாகவும் அங்கிருந்து கிழக்கு நோக்கி 2வது மீன்பிடித்துறைமுக ஒழுங்கையின் மத்திய கோட்டைச் சந்திக்கும் வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

கிழக்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து 2 வது மீன்பிடித்துறை ஒழுங்கையின் மத்தியோரமாக மாணுக்குப் பிட்டியிலுள்ள [illegible] அந்தம் வரையும் வரையப்பட்ட கோட்டினால்.

தெற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து கிழக்குநோக்கி வாவிக்கரையோரமாக அராலித்துறைச் சந்தியைச் சந்திக்கும் வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

மேற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வட கிழக்கு நோக்கி அராலித்துறை வீதியின் மத்திய கோட்டின் ஓரமாகச் செம்மணத்தி ஒழுங்கை ஓரமாக பெரிய குளம் வாய்க்கால் மதகைச் சந்திக்கும் வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

**6-ம் வட்டாரம்**
(வாளாவித்துறைவீதி)

வடக்கு: அராலித்துறையிலிருந்து வட மேற்கே அரைமைல் தூரத்திலுள்ள ஒரு இடத்திலிருந்து கிழக்கு நோக்கி நெல் வயல்களினூடாகவும், பெரு வரம்புகளினூடாகவும், பெரு வரம்புகளினோரமாகவும் 11 ம் மைல் கல்லில் அராலி—கட்டுவன் வீதியைச் சந்திக்கும் வரையும்; அங்கிருந்து தெற்கு நோக்கிச் சொல்லப்பட்ட வீதியோரமாக கிழுவலை—இராவலை வீதிச் சந்தி வரைக்கும், அங்கிருந்து கிழக்கு நோக்கி கிழுவலை—இராவலை வீதியோரமாக பெரிய குளம் வாய்க்கால் மதகைச் சந்திக்கும் வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

கிழக்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து 5-ம் வட்டாரத்தின் மேற்கெல்லையோரமாக அராலித்துறை சந்தி வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

தெற்கு: அராலித்துறை சந்தியின் மத்தியினால்.

மேற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வாவிக்கரையோரமாக 6-ம் வட்டாரத்தின் வட எல்லை தொடங்குமிடத்திற்கு வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

[நாளை 7ம், 8ம், வட்டார எல்லை விபரங்கள் வெளிவரும்]

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் அல் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி 6-35 சைவ நற்சிந்தனை- 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 பக்திப்பாடல்கள், 7-30 குரல்வளை, 8-10 இசைவேளை, 8-15 இஸ்லாமியமிலக்கியங்கள்.

344 மீற்றர் அல் 49 மீற்றர்

பகல் 12-00 உரைச் சித்திரம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீற்றர் அல் 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்தநின வாழ்த்துகள், 5-30 வானமஞ்சரி.

இரவு 6-15 குதூகலம், 6-45 பா வளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 பேச்சு — கே. இரத்தின சிங்கம், 7-45 வாத்திய இசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 வானொலி விவசாயவிழா — அஞ்சல்.

# இன்றைய பலன்

(30 - 7 - 68)
ஆடி மீ 15 உ
செவ்வாய்க்கிழமை

திதி- பஞ்சமி பகல் 3-15 மேல் ஷஷ்டி.

நட்சத்திரம் — உத்தரம் பகல் 9-00 மேல் அத்தம்.

ராகுகாலம் - 3-03—4-33.

யமநேரம் - 10-33—12-03.

இன்று பிறந்தவர்களுக்கு — கடமைக்கு முதலிடமளித்துக் கண்ணியத்தைச் சேர்ப்பீர்கள். காதல் விவகாரங்களும் கலகலக்கும். ஆரம்பத்தில் எதிர்ப்பவர்கள் முடிவில் உங்கள் விருப்பத்துக்கே வந்துவிடுவர். வியாபாரிகளுக்கு எதிர்பாராத இலாபங்கள் கிடைக்கும். விளையாட்டு வீரர்கள் வெளிநாடுகள் செல்லும் வாய்ப்பு உருவாகலாம். சிலர் வாழ்க்கையில் விபத்துக்கு இடமுண்டு. போதுமென்ற மனம் இருப்பின் பொன் செய்யும் காலம், புகழும் குவியும்.

மேஷம்- இல்லத்துயர், இதயபாரம்.
ரிஷபம்- தேன் சொட்டும் பேச்சு, நேர்மை வெல்லும்.
மிதுனம்- நற்பெயர் கெட்டல், நலமும் சேரும்.
கடகம்- சமரசப்பேச்சு, சன்மானமுண்டு.
சிம்மம்- அன்னியர் நாட்டம், அலைச்சல் மிகுதி.
கன்னி- காகிதக் கப்பலில் கரைசேர முடியாது.
துலாம்- போதுமென்ற மனம், பொருள்வரவு.
விருச்சிகம்- ஆசையைக் காதே, அவதிப்படாதே.
தனுசு- அன்னையின் ஆசி, அனைத்திலும் வெற்றி.
மகரம்- பனிமலர்ப் பார்வை, [illegible] உதயம்.
கும்பம்- பாதையில் தடை, பார்த்து நட.
மீனம்- காதல் கரும்பு, கனவத்திட விருப்பு.

சோதிடக்கலாநிதி
[illegible]

ரூபா கூலி உயர்வு

# சட்டமாகாததால் சுருட்டுத் தொழிலாளர் கஷ்டம்

யாழ்ப்பாணம், செவ். இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்கத்தின் தீர்மானத்தின்படி சுருட்டுத்தொழிலாளர்களுடைய 13 ரூபா கூலி உயர்வு சட்டரூபமாக்கப்படாததால் வடமாகாணத்தில் பல சுருட்டு தொழிற்சாலைகளில், தொழிலாளர்கள் கஷ்டமடைந்து வருகிறார்கள்.

சுதுமலை அம்மன்கோவில் வீதியில் நடந்த இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்க பொதுக்கூட்டத்தில் திரு மி. சங்கரப்பிள்ளை பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:— வெகுவிரைவில் சம்பள நிர்ணயசபை யாழ்ப்பாணத்தில் கூடி கூலிஉயர்வை நிர்ணயிக்கும். இதன்பின் சம்பளத்தைக் குறைத்துக் கொடுக்கும் முதலாளிமார்கள் மீது சட்டரூபமாக நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் கடந்த எட்டு மாதமாக குறைத்துக் கொடுத்த சம்பளத்தையும் சங்கம் பெற்றுக்கொடுக்கும்.

சங்க செயலாளர் திரு சி. முதலியார் பேசுகையில் 13 ரூபா கூலி உயர்வுக்காக போராடிய சங்கங்களும், தொடர்ந்து போராடி வருவது நமதுசங்கந்தான் என்று கூறினார்.

திரு. செ. துரைராசா, திரு. செ. கந்தப்பு, திரு. மா. சிவராசா மற்றும் பலர் பேசினார்கள்.

## பெற்றோர் தினவிழா

யாழ்ப்பாணம், செவ். மானிப்பாய் புனித அன்னம்மாள் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் பெற்றோர் தின விழா நேற்றுமாலை உடுவில் எம். பி. திரு வி. தர்மலிங்கம் தலைமையில் ஆரம்பமாகியது.

விழாவில் முதலில் வருடாந்த அறிக்கை வாசிக்கப்பட்டதும் தலைவர் உரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில் பாடசாலையின் முன்னேற்றத்துக்கு பெற்றோரும் ஆசிரியரும் எப்படி ஒத்துழைக்கவேண்டுமென்பதை சுட்டிக் காட்டி பாடசாலையின் உயர்வுக்கு அரசாங்கத்தை எதிர்பார்க்காமல் எமது சொந்த முயற்சியிலேயே அவைகளை செய்து கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தினார். திருமதி குகதாசன் இல்லங்களுக்கிடையிலான போட்டிப் பரிசில்களை வழங்கினார். போட்டிகளில் புனித யோசப் இல்லம் முதலாமிடத்தையும், புனிதறேசா இல்லம் இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

இதைத்தொடர்ந்து மாணவர்கள், பழைய மாணவர்களின் கதம்ப நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. மணிகுட நாடகமும் இடம்பெற்றது. சங்கத்தலைவர் நன்றியுரை கூறினார்.

இ போ. ச

## பயிற்சிப் பாடசாலைக்கு புதிய தலைவர் விஜயம்

கொழும்பு, திங்கள். இலங்கைப் போக்குவரத்துச்சபையின் புதிய தலைவரான திரு. ஏ. ஆர். பீ. விஜயசேகரா முதல் முறையாக வேரஹெரயில் உள்ள இ போ. ச. சாரதிகள், கண்டக்டர்கள் பயிற்சிப் பாடசாலைக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்தார்.

இங்கு பயிற்சியில் உள்ள நூற்றுக்கணக்கான சாரதிகளும், கண்டக்டர்களும் அவருக்கு அணிவகுப்பு மரியாதையை மிகவும் உற்சாகமாக அளித்தனர். திரு. ஏ ஆர். பீ விஜயசேகராவை பயிற்சிப் பாடசாலை அதிபர் திரு. [illegible] அமரசிங்கம் உட்பட பல அதிகாரிகள் வரவேற்றனர். [வி. தி]

## அவசரகால உணவுற்பத்தி

உடுப்பிட்டி, திங்கள். கரணவாய்தெற்கு கிராம சேவையாளர் திரு. கே. வேலயுதபிள்ளையினால் இப்பகுதியில் அவசரகால உணவுற்பத்தி இயக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதற்கு முக்கோணபாகம் 'கிளாத்து' என்னுமிடத்தில் 10 ஏக்கர் காணி ஒவ்வொருவருக்கும் ஓர் ஏக்கர் வீதம் 10 பேருக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது.

## வருடமுடிவுக்குள் மின்சார வசதி

பருத்தித்துறை, திங். இவ்வாண்டு இறுதிக்குள் உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள சரவெட்டி, நவிண்டில், தெல்லியடி ஆகிய பகுதிகளுக்கு மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது. இதைத் தொடர்ந்து கத்துருத் தண்ணீர்த்திட்டமும் வேலையும் துரிதமாக முடியுமெனத் தெரிகிறது!

## அன்னம்மாள் திருநாள்

யாழ்ப்பாணம்- செவ். மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த உற்சவம் 19-ந் திகதி கொடியேற்றத்துடனும் நவநாள் ஞான ஒடுக்கப் பிரசங்கத்துடனும் ஆரம்பமாகியது. வண. குரவர் அம்பிரஸ் ஞானஒடுக்கப் பிரசங்கம் செய்தார். தினமும் திவ்விய பூசைப்பலியும், திருச்சுரூப எழுந்தேற்றமும் நடைபெற்று கடைசிநாளில் திவ்விய பாடற் பூசையுடனும் திருச்சுரூப ஊர்வலத்துடனும் திருநாள் முடிவுற்றது.

# சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு சட்டத்தைதிருத்தமுயலுவேன்

—உடுப்பிட்டி எம். பி.

புலோலி, திங்கள். "அரசியல் பொருளாதாரத் துறைகளோடு கலைத்துறையும், விளையாட்டுத்துறையும் முன்னேறினாலே நாடு முன்னேறியதாகும். விளையாட்டுப் போட்டிகள் ஒற்றுமைக்கு வழிவகுக்கும்" என தென்புலோலி அறிவகம் சனசமூக நிலையத்தின் 13-வது ஆண்டு நிறைவுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி. யுமான திரு மு. சிவசிதம்பரம் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

கிராமப் புறங்களிலுள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் பயனடைவதற்காகவும் மக்களிடையே துவேஷ மனப்பான்மையை ஆற்றவும் விளையாட்டுப் போட்டிகளை கிராமந்தோறும் சகல மக்களும் நடாத்தி வரவேண்டும். இதன் மூலம் நம்மிடையே நிலவும் பாகுபாடுகள் நீங்க வழி பிறக்கும்.

சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச் சட்டம் திருத்தப்படவேண்டும். இதற்காக என்னாலியன்ற முயற்சி எடுப்பேன். இந்தச் சட்டத்தை மாற்றி அமைத்தவுடன் முதலில் தேநீர்க்கடைப் பிரவேசம், ஆலயப் பிரவேசம் முதலியவற்றை பெரியார்களின் உதவியுடன் தீர்த்து வைக்க முயற்சி எடுப்பேன்."

## 'ஆசிரியசேவை ஒருதொண்டு'

உடுப்பிட்டி, திங்கள். 'ஆசிரியசேவையைக் கடமையாக மட்டும் கருதாது அதனை ஓர் தொண்டாகவும் கொள்ளவேண்டும். எனது ஆசிரியப்பணியில் நான் பல அனுபவங்களைப் பெற்றுள்ளேன். என்னிடம் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவரையும் எனது குழந்தைகளாகவே கருதுகிறேன்.'

இவ்வாறு [illegible] திரு இருதயக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் திரு வீ அந்தோனிப்பிள்ளை இராசையா கல்லூரி மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் தமக்களிக்கப்பட்ட பிரியாவிடைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார். இப்பிரிவுபசாரவிழாவுக்குத் தலைமை வகித்த கல்லூரி அதிபர் திரு. நடராசா ஆசிரியரின் சேவையைப் பாராட்டிப் பேசினார்.

## புதிய [illegible]

மல்லாகம், திங்கள். யோகபுரம் அரசினர் மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில் [illegible] கடமையாற்றிய திரு. [illegible] இராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

## 6-வது ஆண்டுவிழா

வல்வெட்டித்துறை, திங். வல்வை உதயசூரியன் கழகத்தாரின் 6-வது ஆண்டு விழா 31-ம், 1-ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது. உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் நடைபெறும் முதலாவது நாள் நிகழ்ச்சியை வல்வை பொலிஸ் அதிபர் திரு. ரஞ்சித் வியனகே ஆரம்பித்து வைப்பார். வெற்றிபெற்றவர்களுக்கு யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் பரிசில் வழங்குவார். இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்குக் கலைஅரசு திரு. சொர்ணலிங்கம் தலைமைவகிப்பார். பிரமுகர்களாக செனட்டர் டி. ஜி. பி. ரணசிங்க, செனட்டர் வேணன் திசநாயக்கா ஆகியோர் கலந்துகொள்வர்.


# சந்தனம்

கோயில் தேவைகளுக்கும்
மங்கள வைபவங்களுக்கும்
இயந்திரத்தினால் அரைத்த
பச்சை சந்தனம்
எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

58, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.
160, செட்டியார் தெரு கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## முகமாலைக் கிராமச்சபை

### கேள்வி விளம்பரம்

கீழ்காணும் றோட்டு வேலைகளுக்கு 1968ம் ஆண்டு ஆவணி மாதம் 18ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி வரையும் ரூபா மதிப்பிரத்துக்கும் அதற்கு மேலும் பதிவுசெய்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் முகமாலைக் கிராமச்சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1968ம் ஆண்டு ஆவணி மாதம் 17ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணி வரை இக்கிராமச்சபைச் செயலகத்தில் முதல் வேலைக்கு ரூபா 50/- கேள்விப் பிணைப் பணமாகவும், ரூபா 10/- கேள்விப் பத்திரப் பணமாகவும், ஏனைய வேலைகளொவ்வொன்றிற்கும் ரூபா 25/- கேள்விப் பிணையாகவும், ரூபா. 5/- கேள்விப் பத்திரப் பணமாகவும் செலுத்திக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும். கேள்விப் பத்திரப் பணங்கள் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

ஏனைய விபரங்களைக் கிராமச்சபைச் செயலகத்திலும், யாழ்ப்பாணம் உள்ளூராட்சி அமைச்சு அலுவலகத்திலும் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

**றோட்டுகளின் பெயர்கள்**

1. வண்ணாங்கேணி நாகதம்பிரான் கோவிலடி றோட்டு.
2. கோவளம் றோட்டு.
3. இத்தாவில் றோட்டு.
4. பளை-செம்பியன்பற்று றோட்டு.

ச. சின்னத்துரை ஜே. பி.
தலைவர்.
கிராமச்சபை, முகமாலை.

கிராமச்சபைச் செயலகம்.
முகமாலை-பளை.
27 7-1968. 904

# தேவை

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்,
111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

மேற்படி சமாசத்திற்கு 100000 "சி" சாக்குகள் தேவை. 10-8-68 பகல் 12 மணிக்கு முன்னர் விண்ணப்பப்பத்திரங்களை நிபந்தனையுடன் பெற்றுக் கொள்ளவும்.

903 காரியதரிசி.

217/2 கைடச்சாமி ஒழுங்கை.
நீராவியடி,
யாழ்ப்பாணம்,
29-7-68.

## கனிஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சை

## கார்த்திகை 1968

வடமாகாண ஆசிரிய சங்கத்தினால் நடாத்தப்படும் இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பாடசாலை மாணவர்களிடமிருந்து 15-9-68க்கு முன்பாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளிடமிருந்து 31-8-68க்கு முன்னாகவும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரங்களைக் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

1968—1969 பரீட்சைக் குழு உத்தியோகத்தர்கள் பின்வருமாறு:

தலைவர்: திரு. ஏ. ஆர். இராசநாயகம், கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.

காரியதரிசி: திரு. த. சேனாதிராசா, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

உபகாரியதரிசி: திரு. சி. பரமானந்தம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

பரீட்சை சம்பந்தமான கடிதங்கள் யாவும் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

த. சேனாதிராசா,
902 கௌரவ காரியதரிசி.

# அறிவித்தல்

மீசாலை 'பக்த நந்தனார்க் நிலைய'க் கட்டிட நிதிக்காக மீசாலை காந்திஜி நாடக மன்றம் அளிக்கும் "பக்த நந்தனார்" மேடையேறவிருக்கிறது.

இடம்:
டிறிபேக் கல்லூரி சரவணக்கச்சேரி.

காலம்:
30-7-68 இன்றிரவு.

பிரவேசக்கட்டணம் ரூபா 5, 2, 1. சிறுவர் சதம் 50.
905

## விளையாட்டுப் போட்டி

மல்லாகம், ஞாயிறு யோகபுரம் மகாவித்தியாலயத்தின் முதலாவது வருடாந்த விளையாட்டுப் போட்டி இம்மாதம் 31-ம் திகதி நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா கலந்து கொள்வார். கிளிநொச்சி எம். பி பண்டிதர் கா. பொ. இரத்தினம் வடமாநில வித்தியாதிபதி திரு. எஸ் தணிகாசலம் உட்படப் பலர் உரைநிகழ்த்துவர்.

—

## பட்டினசபையிடம் ஒப்படைப்பு

சுழிபுரம், திங்கள் மானிப்பாயிலுள்ள அதிகாரி செல்லமுத்து நினைவு நூல் நிலையத்தை மானிப்பாய் பட்டின சபையாரிடம் ஒப்படைக்க நூல்நிலைய சபையினர் முடிவு செய்துள்ளனர்.

---

மானிப்பாய்
**வெஸ்லி சினிமா**
தினசரி: 6-30 9-30
விடுமுறைதினங்களில் 2 30
சுந்தரராஜன் ஜெயலலிதா
நடித்த
**மேஜர் சந்திரகாந்த்**

---

3வது வாரம்!
**ராஜா**
(யாழ்ப்பாணம்)
ரகுநாதன் - சந்திரகலா
தங்கவடிவேல்
நடித்த
**நிர்மலா**

---

**வின்ஸர்**
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
பி. சரோஜாதேவி
நடித்த
**அரச கட்டளை**

---

**ராணி**
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நாகேஷ் — விஜயநிர்மலா
நடித்த
**பணமா பாசமா**

---

**MANOHARA**
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45 p m.
Laurence Payne
in
THE TELL - PALE HEART
[Adults Only]

---

**REGAL** JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P. M
John Wayne &
Rita Hayworth
in
**Circus World**

# மாவட்டசபை . . .

1-ம் பக்கத் தொடர்ச்சி

பிணைந்துள்ளது. ஆனால் வகுப்புவாத உணர்ச்சிகளை தூண்டுவது கலபமாதலால் தமிழர்கட்டுப்பாட்டோடும் பொறுமையோடும் இருக்க வேண்டும். அப்பொழுது தான் சமூகஒற்றுமையை வளர்க்கலாம். ஆறுதலாகப் போனால் வெற்றியுண்டு!

இதற்குமேல்வேறொன்றும் சொல்லத்தேவையில்லை, ஆயினும் தற்போதுள்ள நிலைமையில் ஒரு விஷயத்தை நினைவிலிருத்தல் வேண்டும்,

ஃ ஃ ஃ

அதாவது தமிழருக்கும் சிங்களவருக்குமிடையே வளர்ந்துள்ள பரஸ்பர சந்தேகம்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் சிங்களம் கற்பிப்பது இச்சந்தேகத்தை ஆற்றுவதற்கு ஒரு வழி. தமிழரும் சமஷ்டிக்கட்சியும் சிங்களமே உத்தியோகமொழி என்பதை ஒப்புக்கொண்டு விட்டார்கள். தொழில்வசதிகளுக்கு அதுமுக்கியமானது, தமிழர் தாடரசு சிங்களம் கற்க ஆரம்பித்தால் அதுபெரும்பான்மை மொழிக்கு நல்லெண்ணம் காட்டும் அறிகுறியாகும்.

தமிழ் அரசாங்க ஊழியர்கள் மேல் பதவிகளுக்கு வர முடியாமல் போனது சிங்களம் தெரியாமையால். உயர் பதவிகளுக்கு தமிழரும் போட்டியிடவேண்டும். இவ்விஷயத்தில் சாதிபேதம் தலைப்பட்டால் அதற்காக போகிட்டு மடியவும் தயாராயிருக்கவேண்டும்.

சமஷ்டிக்கட்சியின் பெயரும் ஒரு பிரச்சினையை எழுப்பியுள்ளது. சாதாரண சிங்களவர்கள் இதைப் பற்றிப் பேசுவதை நான் கவனித்துள்ளேன். இலங்கைத் தமிழரசுக்கட்சி என்ற பெயர் எந்த சாதாரண சிங்களவனையும் பைத்தியமாக்கிவிடும். தமிழர் வடக்கிலும் கிழக்கிலும் தனி ராஜ்யம் அமைக்க முயலுகிறார்கள் என்று அவர்கள் வாதாடுகிறார்கள்.

சமஷ்டிக்கட்சி எழுப்பிய சந்தேகமும் அவநம்பிக்கையும்தான் மாவட்டசபைகளுக்கு பாதகமாயிருந்தது. எப்பொழுதாவது ஒரு நாள் மாவட்டசபைகள் ஏற்பட்டாலும் சமஷ்டி ஆட்சி கிடைக்குமா?

சமஷ்டிக்கட்சியின் இறுதி லட்சியம் அதுவாயிருந்தால் கொள்கையை மற்றுவிடிலும் பெயரையாவது மாற்றி சிங்களவரின் சந்தேகத்தை ஆற்ற முடியாதா?

கொம்யூனிஸ்ட் கட்சி சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்துள்ளபோதிலும் அது தன் பெயரை மாற்றவில்லையே என்று சிலர் கேட்கலாம்.

இதற்கு மறுமொழி: திருமதி பண்டாரநாயக்கா கொஞ்சமாவது கொம்யூனிஸ்ட் கொள்கையை ஏற்றுக்கொள்வார். ஆனால் திரு. டட்லியும் சிங்களவரும் சமஷ்டியை துப்புரவாக ஏற்றுக்கொள்ளவில்லை.

சமஷ்டி முறையிலாவது இலங்கையைப் பிரிப்பதை திரு. டட்லி கண்டித்திருக்கிறார். சமஷ்டி முறையால் சிறுபான்மைப் பிரச்னைகளை தீர்க்க முடியாதென்று நீதி மந்திரி திரு. விஜயமானேயும் செனட் சபையில் சிமாசனப்பிரசங்கம் விவாதிக்கப்பட்டபோது அப்பட்டமாகக் கூறிவிட்டார்.

இந்நிலையில் சமஷ்டியின் மார்க்கம் யாது?

# வரி விளம்பரம்

## தேவை

வெல்டர்:
மின்சாரத்தினால் சகல லோகங்களையும் ஒட்டிக் கொடுக்கக்கூடிய மிகத் திறமைவாய்ந்த வெல்டர் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். வ. பஞ்சாட்சரம், 'ஸ்ரீமுருகன் மின்சார வெல்டிங் வேக், 46. மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
1276

உழவு மெசின்:
பேர்குசன் அல்லது போட்சன் டெக்ஸ்டா கிளருடன் உடன் தேவை. விலை விபரங்களுடன் விண்ணப்பிக்க. வே. இலிங்கநாதன், வெளிய அரசடி சாவகச்சேரி. 1279

## ஆலய உற்சவம்

அளவெட்டி, திங்கள் குப்பிளான் கற்கரைக் கற்பகவிநாயகராலயவருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 8 நாட்கள் விசேட திருவிழாக்கள் நடைபெற்று 9-ம் நாளன்று [7-8-68] தேர்த் திருவிழாவும், 10-ம் நாளன்று [8-8-68] தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

—

## தமிழக அறிஞர்கள் ஈழம்வருகின்றனர்

பருத்தித்துறை, திங்கள் தலைநகர மத்திய அரசின் கல்வி ஆலோசகர் திரு. தி. சுந்தரவடிவேலு, டில்லிப்பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு சாலை இளந்திரையன், சென்னை பிரெசிடென்சி கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் கல்யாணி ஆகியோர் இலங்கைக்கு வருகின்றனர். சமுத்திரத்திலுள்ள அனுராதபுரம், சிகிரியா, பொலநறுவை ஆகிய இடங்களில் காணப்படும் வரலாற்றுச் சாதனங்களை ஆராய்ந்து, சோழர், பாண்டியர், பல்லவர் நாகரீகங்களின் தாக்கங்களைப்பற்றிய ஓர் ஆராய்ச்சி நூல் எழுதும் நோக்கமாக விரைவில்ஈழத்துக்கு வரவிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

---

இப்பொழுது மக்கள் ஆதரவுடன்
வீறுநடை போடுகிறேன்

**நான்**

| | | |
|---|---|---|
| பிளாஸா (கொழும்பு) | மைலன் (கொழும்பு) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்) |
| கிங்ஸ்லி (கொழும்பு) | விஜயா (மட்டுநகர்) | ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) |

★ ரவிச்சந்திரன்
★ ஜெயலலிதா
மனோரமா-நாகேஷ்-முத்துராமன்
பேபி பத்மினி-மனோகர்
நடித்த

ஸ்ரீ விநாயகா பிக்சர்ஸ் **நான்**

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
கெபிட்டல்
(கொழும்பு)
★ ராஜ்கபூர்
★ ராஜேந்திரகுமார்
★ வைஜயந்திமாலா
நடித்த

**சங்கம்**

(டெக்னிக் கலர்)

---

**இப்போதுதான் வந்துள்ளன!**

- 'செய்க்கோ' வெள்ளை ஷேட்டுகள் காரியாலய பாவிப்புக்கு ரூபா 7-75
- 'சிற்றிஸன்' எம். கே. வி. டென்னிஸ் / ஸ்போட்ஸ் ஷேட்டுகள் ரூபா 10-50
- 'மாக்ஸிம்' பிரீபெக்ற் ஸ்பெஷல் அளவுகள்: 13 1/2, 14, 14 1/2 மட்டும் ரூபா 13-00
- 'ஹென்லி' கொம்மாண்டோ பலவித வர்ணக் கோடுகளுடன் ரூபா 14-00
- 'ஜீப்' பிறை—நைலோன் 'ரீ' ஷேட் மாலையில் அணிவதற்கு ரூபா 22-50

மற்றும் பல ரகங்கள்

**டயரும்ஸ்**

54, மெயின் வீதி, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்குளம் முக்கொலைவழக்கு குற்றப்பத்திரிகை தாக்கல்

## ஆகஸ்ட் 11-ம் திகதி விசாரணை

வவுனியா, திங்கள்

மாங்குளம் முக்கொலை சம்பந்தமாக வவுனியா பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பி. இராமநாதன் நேற்று வவுனியா மாஜிஸ்திரேட் திரு. நவரத்தினம் முன்னிலையில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து, இவ்வழக்கு சம்பந்தப்பட்ட 25 தடைப் பொருட்களையும், நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். இத் தடயப் பொருட்களில், இரத்தக்கறை படிந்த சாரம், துவாய், சாக்குச்சாக்கடை பெரிய கத்தி, குறிப்பு புத்தகம், கண்ணாடி காணப்பட்டன.

வவுனியா நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும், பெண்கள் உட்பட ஏராளமானோர் விசாரணையைப் பார்ப்பதற்காகத் திரண்டிருந்தனர்.

மாஜிஸ்திரேட் திரு. நவரத்தினம் குற்றப்பத்திரிகையை வாசித்தபின் அடுத்தமாதம் 11-ம் திகதி விசாரணை நடைபெறுமெனத் தெரிவித்தார்.

இவ்வழக்கில் கஜ. விஸ்வியம், ஏ பியரட்ணு ஆகிய இருவரும் இவ்வருடம் ஜுலை மாதம் 2-ம் திகதிக்கும் 3-ம் திகதிக்குமிடையில் மாங்குளத்திலுள்ள 40 ஏக்கர் காட்டின் மத்தியில் செல்லத்துரை என்பவரை கொலை செய்ததாகவும், அதே இடத்தில் அதே நேரத்தில், பொன்னையா என்பவரையும் கொலை செய்ததாகவும் அதே நேரத்தில் அதே இடத்தில் அதே நோக்கத்துடன் தர்மராஜா என்பவரை கொலை செய்ததாகவும், அதே நேரத்தில் அதே இடத்தில் சுப்பையா என்பவரை கத்தியால் வெட்டிக் காயப்படுத்தியதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இவ் வழக்கில் முடிக்குரிய தரப்பில் 32 சாட்சிகள் விசாரணை செய்யப்படுவார்கள்.



## இன்று இன்னிசை விருந்து

உடுப்பிட்டி, செவ்வாய்

கரவெட்டி இளம் கலைஞர் செல்வன் ஏ. கே. கருணாகரனின் இன்னிசைக் கச்சேரி இன்று யாழ் நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. கரவை அம்மன் ஆலய நிதிக்காக நடத்தப்படும் இவரது கச்சேரியில் உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம்.பி.யுமான திரு. மு சிவசிதம்பரம் திரு.கே. பி. ஹரன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரான கருணாகரன் இளமையில் கீதாஞ்சலி வி. கே. நல்லையா எஸ். கோவிந்தராசா ஆகியோரிடம் இசைக்கலையைப் பயின்றார். பின்பு இராமநாதன் இசைக்கல்லூரியில் மகாராஜபுரம் சந்தானத்திடம் பயின்று சங்கீத ரத்தினம் பட்டம் பெற்றார். சென்னை கர்நாடக சங்கீத மத்தியகல்லூரியில் இரண்டுவருடங்கள் சங்கீத வித்வான பட்டப் படிப்புப் படித்து தாயகம் திரும்பினார்.

சென்னை வானொலியிலும் கச்சேரி செய்து பலவித்து வான்களின் பாராட்டுதலைப் பெற்றுள்ளதோடு தமிழகத்தில் பல தனிக்கச்சேரிகளும் செய்துள்ளார். ஆந்திரா, கேரளம், முதலிய இடங்களிலும் இவர் பல கச்சேரிகள் செய்துள்ளார்.

—

## சுப்ரீம் கோர்ட்டுக்கு மாரப்படுத்தப்பட்டது

சாவகச்சேரி, திங்கள்

மந்துவில் கொலைவழக்கு இன்று சுப்ரீம் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தப் பட்டது. சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. விக்னராஜா பாரப்படுத்தினார்.

மந்துவிலைச் சேர்ந்த இராசமுத்து குலசிங்கம் என்ற இளைஞரை அதே ஊரைச் சேர்ந்த கணபதி இரத்தினம் என்பவர் கத்தியால் குத்திக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

விசாரணையின்போது சின்னத்தம்பி வைரமுத்து வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

எதிரி சார்பில் அட்வக்கேட் எம். தம்பித்துரை புறக்டர் வி பாலகிருஷ்ணன் அனுசரணையுடன் ஆஜரானார். வழக்காளி தரப்பில் புறக்டர் வி. செல்லத்தம்பி, பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பெர்னாண்டோவின் உதவியுடன் ஆஜரானார்.

— —

## எதிரிகள்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

யான பன்னிரண்டு வயதான அச்சினி முக்கிய சாட்சியாக விசாரிக்கப்பட்டார். காலஞ்சென்ற தன் தாயாரை தன் தகப்பனார் டாக்டர் குலரத்ன குதிரைச் சவுக்கினால் அடிப்பார் என்று சாட்சியத்தில் தெரிவித்தார்.

கடந்த வருடம் காலி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டது. வழக்கை விசாரணை செய்த மாஜிஸ்திரேட் சுப்ரீம்கோர்ட்டுக்குப் பாரப் படுத்தினார்.

கொழும்பு, தெற்கு அசைஸ் நீதிமன்றத்தில் பிரதமநீதியரசர் எச். என். ஜி. பெர்னாண்டோ முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டபோது சென்ற வியாழக்கிழமை டாக்டர் குலரத்தின எதிரிகள் கூண்டில் நின்றபடி கண்ணீர் விட்டுத் தேம்பித் தேம்பி அழுதார்.

"புனித பைபிளின் மீதும் புனித பகவத்கீதை மீதும் புனித திருக்குர்ஆன் மீதும் ஆணையிட்டுக் கூறுகிறேன்- நான் ஆர்சனிக் நஞ்சு மருந்தை யாருடைய உயிரையும் பலிகொள்ளவோ, எவரும் உபயோகிக்கவோ நான் அனுமதிக்கவில்லை" என்று டாக்டர் குலரத்தின அழுதபடியே கூறியிருந்தார்.

முதலாம் எதிரி சார்பில் சிரேஷ்ட வழக்கறிஞரான திரு. ஜி ஜி. பொன்னம்பலம் கியூ.ஸி யும் இரண்டாம் எதிரி சார்பில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவும் ஆஜராகியிருந்தனர். வழக்கு ஆங்கிலம் பேசும் ஜூரர்கள் முன்னிலையில் விசாரணை நடைபெறுகிறது.

# கோர்ட்டிற்கு வராத எதிரிமீது வாரண்ட்

## மாவிட்டபுரம் ஆலயப் பிரவேச வழக்கு விசாரணை

குரும்பசிட்டி, திங்கள்

சமூக குறைபாடுகள் ஒழிப்புச்சட்டத்தின் கீழ் முன்னைநாள் வவுனியா எம். பி. திரு. வி. சுந்தரலிங்கம் உட்பட ஒன்பது பேர் மீது ஹரிஜனர்களை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குள்ளே சென்று தரிசிக்கவிடாது தடுத்ததாக காங்கேசன்துறைப் பொலிசாரால் தொடரப்பட்டுள்ள பத்து ஆலயப் பிரவேச வழக்குகள் மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேல் விசாரணைக்கென பத்து வழக்குகளையும் செப்டம்பர் மாதம் 3-ம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்துள்ளார்.

இரு வழக்குகளில் எதிரியான என். எஸ். சுப்பிரமணியம் சம்மன்ஸ் வழங்கப்பட்டும் நீதிமன்றத்திற்கு வரத் தவறியமைக்கு நீதிபதி எதிரி மீது வாரண்ட் பிறப்பித்துள்ளார்.

எதிரிகள் சார்பில் அட்வகேட் வி. சுந்தரலிங்கம் ஆஜராகியிருந்தார்.

பத்து வழக்குகளிலும் சம்பந்தப்பட்டுள்ள ஒன்பது எதிரிகளின் பெயர்கள் விபரம் வருமாறு: வி. சுந்தரலிங்கம், எஸ் தம்பிப்பிள்ளை, டி. தேவன், எஸ். சுப்பிரமணியம், வீ. சின்னத்துரை, ஏ. சின்னத்தம்பி, வீ. வையகுமார், எஸ். தாமோதரம்பிள்ளை, வீ. செல்லத்துரை.

## நல்லூர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்ற உற்சவம் நடைபெறும். கொடியேற்ற உற்சவத்தை தொடர்ந்து 26 நாட்கள் திருவிழா நடைபெறுவதோடு வருடாந்த உற்சவம் நிறைவு பெறும்.

போக்குவரத்து ஒழுங்குகளும், சுகாதார ஒழுங்குகளும் செய்யப்பட்டிருக்கிறது. வழக்கம்போல் இம்முறையும் கொடியேற்ற உற்சவத்தின்போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

ஃ ஃ ஃ

இணுவில், செவ்வாய்

இணுவில்—கோண்டாவில்- காரைக்கால் சிவன் கோவில் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து பத்து நாட்களுக்கு நிகழும் இவ்வுற்சவத்தில் ஒன்பதாம் நாள் தேரும் பத்தாம்நாள் தீர்த்த உற்சவமும் நிகழும்.

## தொடர்ந்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தை ஒழிக்க நமது அரசு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது. இலங்கை வருடம் 8 கோடி ரூபாய் பாலுணவுக்காக வெளிநாடுகளுக்குப் போய்ச் சேர்கிறது. இப்படியாகப் பலவழிகளில் பணம் விரயமாவதை நாமே இவைகளை உற்பத்தி செய்வதன்மூலம் தடுக்கலாம்.

யாழ்ப்பாணத்தில் உணவுற்பத்தியில் முக்கால்வாசி உற்பத்தி செய்யப்படுவது பெருமையளிக்கிறது. பட்டதாரிகளில் விவசாய செய்கையில் கவனம் செலுத்தப்படவேண்டும்.

நம்நாட்டில் ஆங்கிலத்தின் தரம் மிகவும் வீழ்ச்சியடைந்தது கவலையளிக்கக் கூடிய ஒரு விஷயமாகும். ஆங்கிலம் உலகமொழி; விஞ்ஞானத்தைப்பயிலவும் உலக நாடுகளுடன் தொடர்பு கொள்ளவும் ஆங்கிலம் முக்கிய இடம் வகிக்கிறது. இலங்கையின் கல்வித் திட்டத்தில் ஆங்கிலம் முக்கிய இடம் வகிக்கவேண்டும்.

சாவகச்சேரி எம். பி திரு. வி. என். நவரத்தினமும் பேசினார்.

## யாரடா கட்டது...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்து நிலத்தில் விழுந்துவிட்டேன். சந்தேக நபர்கள் உடனே அவ்விடத்திலிருந்து ஓடிவிட்டனர். பிறகு நடந்தவை எனக்குத் தெரியாது. சந்தேக நபர்கள் மற்றிருவரின் பெயர்கள் எனக்குத் தெரியாது. ஆனால் நான் அவர்களை அடையாளம் காண்பிக்க முடியும்.

காங்கேசன்துறைப் பொலிஸார் மேலும் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளதுடன் மற்றைய சந்தேக நபர்கள் இருவரையும் தேடிவருகின்றனர்.

## வேலையில்லாப் பிரச்னை தீர றிபேக்கல்லூரி அதிபர் யோசனை

குரும்பசிட்டி, செவ்

"புத்தகப்படிப்பு மட்டும் மாணவர்களுக்கு பிற்காலத்தில் உதவிவிடாது. இவ்வித கல்வி தொடர்ந்து வந்திருப்பதால்தான் பெருந்தொகையான பட்டதாரிகள் உட்பட படித்த வாலிபர்கள் பலர் இன்று வேலையற்றிருக்கிறார்கள் என்று கூறலாம். தொழிற்கல்வி வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க நல்லவழியில் உதவும். தொழிற்சாலைகளுக்கு தேவையானவர்கள் இதனால் உருவாகலாம். தற்போது வெறும் புத்தகப்படிப்பால் தோற்றியுள்ள நிலையை உணர்ந்து தமது பங்கைச் செலுத்த முன்வரவேண்டும். விஞ்ஞானக்கல்வியும் புத்தகங்களோடு மட்டும் நின்றுவிட்டால் அதிக பயனைப் பெற்றுவிடமுடியாது என்பதை பெற்றோர் தெரிந்துகொள்ளவேண்டும்".

சாவகச்சேரி றிபேக்கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா வைபவத்தில் தமது கல்லூரி வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் கல்லூரி அதிபர் திரு. ஜே. வி. தம்பிநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்:

உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யு. தஹநாயக்கா இப்பரிசளிப்புவிழா வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

திரு. வி. என். நவரத்தினம் மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா, சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், வடமாநில வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் ஆகியோரும் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

ராவல்பிண்டி, ஜுலை 29

பாகிஸ்தான் ஆட்சிக்குட்பட்ட காஷ்மீர் பகுதியில், பாகிஸ்தான் 'ஹெலிகொப்டர்' விமானமொன்று விழுந்து நொறுங்கியதன் விளைவாக 6 பேர் உயிரிழந்தனர்

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கம். வைரமுத்துவின் மயானகாண்டம். நம்மைவிடப் பிறர் கஷ்டப்படுவதைப் பார்க்கும்போது, நம் கஷ்டம். ஓரளவு தாங்கக்கூடியதாக இருக்கும். அதுபோல சந்திரமதியின் கஷ்டத்தைப் பார்க்கையில், நிர்மலாக்கள் ஒருவித ஆறுதலும் நம்பிக்கையும் கொள்ளலாமல்லவா?

ஃ ஃ ஃ

ஈழத்திலே தமிழ்ப்படம் பிடிக்க வசதி மிகக் குறைவு. என்றாலும் துணிச்சலுடன் பணம்போட்டு, இதில் ஈடுபட முன்வந்தவர்களை ஆதரித்து உற்சாகமூட்ட வேண்டியது ஈழத் தமிழரின் கடமையாகும். இயற்கை அழகும் இலங்கையில் மிக அதிகம். கலைத் திறமையுள்ளவர்களும் நம்மிடை வலருள்ளனர். அவர்களை ஆதரித்து முன்னுக்குக் கொண்டுவந்து சினிமா கலையை வளர்ப்பவர்கள் சமூகத்துக்கும் நாட்டுக்கும் நல்ல தொண்டு செய்பவர்களாவர்.

ஃ ஃ ஃ

மலைமலை சாமந்தராவிப் பதைத்தெழுவார் மனத்துள்ளே, கலமைக் கிட்டித்திரியுங் கணபதியென்னுங் களிறும் வலமேந்திரண்டு சுடரும் வான் கயிலாயமலையும், நலமார் கெடிலப் புனலும் உடையாரொருவர் தமர் நாம், அஞ்சுவதியாதொன்றுமில்லை அஞ்சவருவதுமில்லை.

— அப்பர்சுவாமிகள்

## யாருடையது?

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் சிவன்—பண்ணை வீதியில் திரு. சுஸ்வரபாதம் என்பவரால் திறப்புக்கோர்வையொன்று கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி பெற்றுக்கொள்ளலாம்.

## ஆசிரியர்களும் கருத்தரங்கும்

யாழ்ப்பாணம், செவ்.

போயா நாட்களிலும் போயாவுக்கு முதல்நாட்களிலும் வித்தியாபகுதியினரால் ஒழுங்குசெய்யப்படும் கருத்தரங்குகளுக்கோ, பயிற்சி வகுப்புகளுக்கோ ஆசிரியர்கள் செல்லவேண்டியது இஷ்டபூர்வமானதெனவும், அப்படியாகச்செல்லவேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டால் அவற்றுக்குச்செல்லும் ஆசிரியர்கள் வேண்டிய படிகளை கோருவதற்கு உரிமை உடையவரெனவும் வடமாகாண ஆசிரியர்சங்க நிர்வாகசபை கருதுகின்றது.

மேற்கூறப்பட்ட நாட்களில் நடாத்தப்படும்பயிற்சி வகுப்புகளிலும் கருத்தரங்குகளிலும் ஆசிரியர்கள் பங்குபற்றுவது கட்டாயமற்றதெனவும் கட்டாயமாகக் கூறப்படுமிடத்து ஆசிரியர் தமக்குரிய படிகளை கோருவதற்கு உரிமையுடையர் என்பதையும் வடமாகாண ஆசிரியர் சங்கம், தனது அங்கத்தவர்களுக்கு அறிவித்திருக்கிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேல வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜுலை மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org